ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2480/08 - 2026 මාර්තු මස 16 වැනි සඳුදා - 2026.03.16

*2480/08 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் பொல்கஹவெல பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

பொல்கஹவெல பிரதேசசபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், பொல்கஹவெல பிரதேச சபையின் இலக்கம் 12-ஹந்துகல வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கல்பொடயலாகே வனசிங்ஹ போவத்த என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான பொல்கஹவெல பிரதேச சபையின் இலக்கம் 12- ஹந்துகல வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக மல்வத்த விதானயலாகே சரத் சிசிர குமார என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

பொல்கஹவெல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க முதியன்சேலாகே ஹரேந்திர பண்டார ரத்நாயக்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு மல்வத்த விதானயலாகே சரத் சிசிர குமார என்பவர் பொல்கஹவெல பிரதேச சபைக்கு இலக்கம் 12- ஹந்துகல வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஆர். எம். எச். பீ. ரத்நாயக்க,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
பொல்கஹவெல பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல் மாவட்டம்,
2026, மாச்சு 16.

EOG 03 - 0143

1A - G 46465 — 08 (2026/03) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*